# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை

**இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் ஆராய்ச்சி கலாசாரத்தையும் பொதுநலத்தையும் வளர்க்கும் மற்றும் நிலை பெறச்செய்யும் நோக்கத்திற்காகவும் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு உதவவிருக்கும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வசதியளிக்கும் நோக்கத்திற்காகவும் இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவையென அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான பேரவை ஒன்றினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் அவர்களால்*
*2016, மே மாதம் 17 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 108 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 16.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

2-PL 009949 -475 (2016/05)

# இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை

*ச.வ.ஓ 28/2014*

**இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் ஆராய்ச்சி கலாசாரத்தையும் பொதுநலத்தையும் வளர்க்கும் மற்றும் நிலை பெறச்செய்யும் நோக்கத்திற் காகவும் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு உதவவிருக்கும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வசதியளிக்கும் நோக்கத்திற்காகவும் இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவையென அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான பேரவை ஒன்றினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### இலங்கை தேசிய ஆராய்ச்சிப் பேரவையினைத் தாபித்தல்

*இலங்கை தேசிய ஆராய்ச்சிப் பேரவையினைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை தேசிய ஆராய்ச்சிப் பேரவை என அழைக்கப்பட வேண்டிய பேரவை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக் கொண்டு இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பெயரைக் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

2-PL 009949 -425 (2016/05)

பேரவையின் குறிக்கோள்கள்.

**3.** பேரவையானது எந்த நோக்கத்திற்காகத் தாபிக்கப்படுகின்றதோ அந்த நோக்கங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) நாட்டில் செயலூக்கமுள்ள விஞ்ஞானம், தொழினுட்பவியல் பொதுநலத்தைக் கட்டியெழுப்புவதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சிக்கு வசதியளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவுதல் ;

(ஆ) தேசிய தேவைகளுக்கு உதவும் ஆராய்ச்சி அடிப்படை ஒன்றை விருத்தி செய்கின்றவாறான உயர்கல்வி கல்வி நிறுவனங்களில் மற்றும் பகிரங்க துறை ஆராய்ச்சி நிறுவகங்களில் மற்றும் வேறு அரசாங்கசார் நிறுவகங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சியை மேம்படுத்துதலும் அதற்கு வசதியளித்தலும் ; அத்துடன்

(இ) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சியை உயர்த்துவதில் தனியார் துறையினது ஒத்துழைப்பைப் புரிந்து கேட்டல்.

பேரவையின் அமைப்பு.

**4.** (1) பேரவையானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சித்துறையிலும் வேறு இயைபான கற்கைநெறிகளிலும் பரந்த அறிவும் அனுபவமும் கொண்ட விஞ்ஞானிகளிடையே இருந்து அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடிய பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதோரையும் ;

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் :-

(i) எவ் அமைச்சரின் அமைச்சுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயம்

குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சுக் கான செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ;

(ii) எவ் அமைச்சரின் அமைச்சுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ் அமைச்சின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி.

(2) அமைச்சரானவர் பேரவையின் தவிசாளராக இருப்பதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

*பேரவையானது அமைச்சரின் பணிப்புரை களின்கீழ் அதனது தத்துவங்களைப் பிரயோகித்தல்.*

**5**. பேரவையானது அதனது தத்துவங்களைப் பிரயோகித்தலி லும் அதனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும் அவை தொடர்பிலும் அமைச்சரினால் வழங்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சி தொடர்பில் அரசாங்கத்தின் பொதுவான கொள்கையுடன் இணங்குதல் வேண்டும்.

*பேரவையின் உறுப்பாண்மைக் கான தகைமை யீனம்.*

**6**. ஆள் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படவிருப்பதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாணசபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையாக இல்லா திருப்பின் அல்லது இருப்பதிலிருந்து இல்லாதொழி யின்; அல்லது

(இ) பேரவையின் உறுப்பினர் ஒருவராக அவரது பணிகள் அவரால் நிறைவேற்றுவதைப் பங்கப்படுத்தும் விதத் தில் பாதிக்கக்கூடிய சாத்தியமுள்ள நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருந்தால் ; அல்லது

(ஈ) ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இன்றி பேரவை யின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு சமுக மளிக்காதிருந்தால் ; அல்லது

(உ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவராக கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின் ; அத்துடன்

(ஊ) அத்தகைய ஆள் இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்.

*பதவிவழி உறுப்பினர்கள்.*

**7**. பேரவையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் எந்தப் பதவியின் பயனைக் கொண்டு அவர் பேரவைக்கு நியமிக்கப்பட்டி ருந்துள்ளாரோ அந்தப் பதவியை வகிக்கும் வரை அத்தகைய அலுவலர் பதவி வகித்தல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்.*

**8**. (1) பேரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொரு வரும், அத்தகைய உறுப்பினர் இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவிவறிதாதலினால் முன்னரே பதவி வறிதாகியிருந்தா லன்றி நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலப் பகுதி ஒன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அத்த கைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர் பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதவியி லிருந்து அகற்றலாம்.

(3) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் பதவியிலிருந்து எந்த நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலக லானது எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதல் வேண்டும்.

(4) (அ) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவியிலிருந்து இறப்பினால், பதவிவிலகலினால் அல்லது பதவி அகற்றலினால் பதவி வறிதாகும் பட்சத்தில், அமைச்சர் 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரைத் தொடர்ந்துறுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(ஆ) அத்தகைய உறுப்பினரின் இடத்தில் அவ்வாறு நியமிக்கப்பட எவரேனும் ஆள் எவ்வுறுப்பினரின் பதவியை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாத பாகத்தின் போது பதவி வகித்தல் வேண்டும்.

(5) பேரவையின் எவரேனும் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றிற்கு இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய இயலாமை பற்றி அமைச்சருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். இதன்மேல் அமைச்சர் 4(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின்போது அவரது இடத்தில் செயலாற்ற என வேறொரு ஆளை நியமிக்கலாம்.

*தவிசாளரின் பதவிக் காலம் முதலியன.*

**9.** (1) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்ட கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம். இப்பந்தியின்கீழ் கட்டளை ஒன்று எத்தவிசாளர் தொடர்பில் ஆக்கப்படுகின்றதோ அந்த தவிசாளர் வர்த்தமானியில் கட்டளை வெளியீட்டுத் தேதியன்று பதவி வறிதாக்கப்பட்டிருப்பதாகக் கருதுப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளர் சுகவீனம் காரணமாக அல்லது இயலாமை காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப் பகுதி ஒன்றுக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, தவிசாளர் அத்தகைய இயலாமைபற்றி அமைச்சருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அமைச்சர் 4(2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய இயலாமையின் போது தவிசாளரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோரார் உறுப்பினரை நியமிக்கலாம்.

(4) தவிசாளர் இறப்பு காரணமாக, பதவி விலகல் காரணமாக அல்லது பதவியிலிருந்து அகற்றல் காரணமாக பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சர் 4(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட தவிசாளர், எத்தவிசாளரை அவர் அடுத்துறுகின்றாரோ அத்தவிசாளரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(5) முதலாம், இரண்டாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரின் பதவிக்காலம் பேரவையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் பேரவையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றறதாக கருதப்படுதலாகாது.

**10**. பேரவையில் ஏதேனும் வெற்றிடம் உள்ளது என்ற காரணத்தினால் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும் பேரவையின் செயல் அல்லது நடவடிக்கையெதுவும் செல்லுபடியற்றதாக கருதப்படுதல் ஆகாது.

**11.** பேரவையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம். *பேரவை உறுப்பினர்களின் ஊதியம் முதலியன.*

**12.** (1) பேரவையின் கூட்டமானது குறைந்த பட்சம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கும் ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும். *பேரவையின் கூட்டங்கள்.*

(2) தவிசாளர் அல்லது அவர் சமுகமளிக்காத பட்சத்தில் சமுகமாயிருந்த உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவெடுப்பதற்கான எல்லா வினாக்களும் சமுகமாயிருந்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகள் கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். சமமான வாக்குகள் வரும் பட்சத்தில் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பேரவையின் ஏதேனும் மட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பேரவையானது அதனது கூட்டங்களின் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

**13.** (1) பேரவையின் இலச்சினையானது பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். *பேரவையின் இலச்சினை.*

(2) பேரவையின் இலச்சினையானது –

(அ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(ஆ) பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆள் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(இ) பேரவையின் அனுமதியின்றியும் பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் சமுகமாகியிருத்தலன்றியும் ஏதேனும் சாசனம் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் இருவரும் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### பேரவையின் தத்துவங்களும் பணிகளும்

பேரவையின் பணிகள்.

**15**. பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பேரவையின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சியை நடாத்துவதற்கு மானியங்கள் வழங்குதல் ;

(ஆ) ஆராய்ச்சியில் அரசாங்க முதலீடுகளின் வினைத்திறமையான பயன்பாட்டை உறுதிப்படுத்தும் வரை, உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பகிரங்கதுறை ஆராய்ச்சி நிறுவகங்கள் என்பன மூலம் பொறுப்பேற்கப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சியை ஒருங்கிணைப்பதற்கு உதவியளித்தல் ;

(இ) பேரவையின் நோக்கத்திற்காக தேவைப்படும் பொறி இயந்திரம் மற்றும் சிறுகருவி என்பவற்றை இறக்குமதி செய்தல் மற்றும் பேரவையினை வினைத்திறமையாக நடாத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வளங்களிலிருந்து சிறுகருவி, நிதியம் மற்றும் வேறு ஏதேனும் உதவியைப் பெறுதலும் ;

(ஈ) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட பாடங்கள் தொடர்பான ஆராய்ச்சி பற்றி அறிக்கைகள், பருவகால இதழ்கள் மற்றும் புதினப் பத்திரிகைகள் என்பவற்றை சேகரித்தலும் அச்சடித்தலும் வெளியீடு செய்தலும் ;

(உ) உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உள்ள விஞ் ஞானம் மற்றும் தொழினுட்பவியல் நிறுவனங்களில் விஞ்ஞானம்சார் கற்கை அல்லது விஞ்ஞானம்சார் பணிக்காக புலமைப்பரிசில்கள் மற்றும் இணை உரிமைப் பரிசில்களை வழங்குதலும் ;

(ஊ) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான ஆராய்ச்சிக்காகவும் கண்டுபிடிப்புகளுக்காகவும் தேசிய முறைமையொன்றை விருத்தி செய்தலும் வெகுமதிகளை அங்கீகரித்தலும் வழங்குதலும் ; அத்துடன்

(எ) விஞ்ஞானம் தொழினுட்பவியல் மற்றும் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி பற்றி விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வு என்பவற்றை நடாத்துதல்.

பேரவையின் தத்துவங்கள்.

**15**. பேரவையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும் மற்றும் வைத்திருப்பதற்கும் அத்துடன் பேரவையின் நோக்கங்களுக்காக அவற்றை விற்பதற்கும், ஈடு வைப்பதற்கும், பரிமாற்றுவதற்கும் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) ஏதேனும் வங்கி அல்லது எவையேனும் வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கும், பேணுவதற்கும் ;

(இ) பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் அல்லது கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும் அவசியமாக இருக்கக் கூடியவாறான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தனிப் பட்டவர்கள் அல்லது நிறுவனங்களுடன் அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்வதற்கும் ;

(ஈ) பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் உடனடியாக தேவைப்படாதிருக்கின்ற நிதியங்களை முதலீடு செய்வதற்கும் ;

(உ) பேரவையின் பணிகளைப் புரிவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாக இருக்கக்கூடிய வாறான அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள், தத்துவங்கள், உரிமங்கள் மற்றும் அதிகாரங்கள் என்பவற்றைக் கொள்ளுவதற்கும் ;

(ஊ) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் தொடர்பான குறித்த வேலைத்திட்டங்கள் பற்றிய ஆராய்ச்சியை ஆரம்பிப்பதற்கு அல்லது நடாத்துவதற்கு தனிப்பட்டவர்களுக்கு, விஞ்ஞானிகளுக்கு அல்லது ஏதேனும் நிறுவகத்துக்கு அல்லது அதிகாரசபைக்கு மானியங்களை வழங்குவதற்கும் ;

(எ) வேலைக்குழுக்களைத் தாபிப்பதற்கும் அல்லது அதனது வேலையின் ஏதேனும் அம்சத்தில் பேரவைக்கு உதவுவதற்கும் அத்தகைய குழுக்களின் பணியின் நோக்கெல்லையை வரையறுப்பதற்கும் அத்துடன் அமைச்சரின் அங்கீகாரத்துடன் அத்தகைய குழுக்களுக்கான ஆட்களை நியமிப்பதற்கும் ;

(ஏ) அவசியமாக வரக்கூடியவாறான பேரவையின் அலுவல்களை நிருவகிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும் ;

(ஐ) பேரவையினால் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கான கட்டணங்கள், இறைகள் அல்லது விதிப்பனவுகளை அறவிடுவதற்கும் ; அத்துடன்

(ஒ) பேரவையின் குறிக்கோள்களை எய்துவதற்கும் பேரவையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அல்லது இடைநேர்விளைவான வேறு எல்லைக் கருமங்களைச் செய்வதற்கும்.

## பாகம் III

### பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணியாட்டொகுதியினரின் நியமனம்

*பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலர்.*

**16.** (1) அமைச்சர் பேரவையின் கலந்தாலோசனையுடன், அதே முறையில் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலிருந்து விஞ்ஞானத்தில் பட்டம் ஒன்றைக் கொண்டுள்ள ஆளொருவரை நியமிக்கலாம்.

(2) பிரதான நிறைவேற்று அலுவலருக்கு பேரவையின் பணிப்புரைகளுக்கு அமைய, அதன் அலுவல்களின் நிருவாகம் மற்றும் பேரவையின் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். அவர், பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்று அலுவலர் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும். அக்காலப்பகுதி அவருடைய நியமனத்திலிருந்து ஐந்து வருடங்களை விஞ்சுதலாகாது என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அவருடைய பதவிக் காலத்தின் போது அத்தகைய பதவியில் அவருடைய செயல்நிறைவேற்றத்தைக் கவனத்திற்கொண்டு பேரவையின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் மீள நியமிக்கப்படலாம்.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர் பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருப்பதற்கும் அவருடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(5) அமைச்சர் அதற்கான குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பிரதான நிறைவேற்று அலுவலரை பதவி அகற்றலாம்.

பேரவையின் பணியாட் டொகுதியின் நியமனம் முதலியன.

**17.** பேரவையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய-

(அ) அதனது பணிகளை புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கலாம் அல்லது நீக்கலாம் ;

(ஆ) அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களுக்கு அத்தகைய ஊதியம் மற்றும் வேறு நன்மைகளைச் செலுத்தலாம் ;

(இ) அதனது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நன்மைகளுக்காக ஊழியர் சகாய நிதியங்கள் அல்லது திட்டங்களைத் தாபிக்கலாம் என்பதுடன் ஒழுங்குபடுத்தலாம் அத்துடன் அத்தகைய நிதியங்கள் அல்லது திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்யலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய அலுவலருக்கு அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) பேரவையானது குறித்துரைக்கப்பட்ட காலமொன்றிற்கென அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டுள்ள வாறான ஆளொருவரை வேலைக்கமர்த்துமிடத்து, பேரவைக் கான சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்திலான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### நிதியம்

பேரவையின் நிதியம்.

**18.** (1) பேரவையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும், அந்நிதியத்திற்கு பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பேரவையின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகள் என்பனவற்றை பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் பேரவையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள், மரணசாசனக் கொடை அல்லது மானியங்கள் என்றவகையாக பேரவையின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் என பேரவையினால் பெறப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டணங்கள், இறைகள் அல்லது விதிப்பனவுகள் என்றவகையாக பேரவையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(2) பேரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் பேரவையினால் உறப்பட்ட செலவினைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அந்நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*பேரவையின் கணக்குகளின் கணக்காய்வு.*

**19.** (1) பேரவையானது அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் அத்துடன் அதன் வேறு எல்லா கொடுக்கல் வாங்கலிற்கான முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பேரவையின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகளின் கணக்காய்விற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

*ஆண்டறிக்கை.*

**20.** (1) பேரவையானது ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவின் ஆறு மாதங்களினுள் அந்நிதியாண்டின்போது பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் ஆண்டறிக்கை ஒன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும், என்பதுடன் அவ்வாண்டு தொடர்பாக பின்வரும் ஆவணங்களின் பிரதி ஒவ்வொன்றும் அறிக்கையுடன் சேர்த்தனுப்பச் செய்வித்தல் வேண்டும் :-

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்கான பேரவையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் ;

(ஆ) அத்தகைய அறிக்கை மற்றும் கணக்குகள் எந்த ஆண்டிற்கு தொடர்புறுகின்றதோ அந்த ஆண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் அறிக்கை ஒன்று.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் பிரதிகளை, அத்தகைய அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

*பேரவைக்கான காணியினைக் கட்டாயமாகக் கொள்ளுதல்.*

**21**. காணி எதுவும் பேரவையின் ஏதேனும் நோக்கத்திற்காக தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கம் (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளற் சட்டத்தின் நோக்கமானது, பகிரங்க நோக்கம் ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அக்காணி பேரவைக்காக அரசாங்கத்தினால் இச்சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாம், என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கொள்ளலிற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை வழக்கு அல்லது குற்றவழக்கிலிருந்து பாதுகாத்தல்.*

**22**. (1) இச்சட்டத்தின்கீழ் பேரவையின்மீது சுமத்தப்பட்ட அல்லது பேரவைக்கு குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தை புரிவதில் அல்லது பிரயோகிக்கையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்கும் பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது அத்தகைய உறுப்பினரால் அல்லது அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பு எதுவும் இணைந்ததாதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் ஏதேனும் இயைபான அதிகாரசபையினால் அல்லது அதற்கு எதிராகக் கொண்டு வரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பேரவையினால் உறப்படும் எவையேனும் செலவுகள் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் வழக்கு அல்லது குற்றவழக்கில் பேரவைக்கு செலுத்தப்படும் அல்லது பேரவையினால் அறவிடப்படும் ஏதேனும் செலவு பேரவையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) பேரவையின் உறுப்பினர் ஒருவரால் அவரது அலுவலரினால் அல்லது அத்தகைய எவரேனும் அலுவலரினால் உறப்பட்ட எவையேனும் செலவினங்கள் விடயத்திற்கு ஏற்ப, இச்சட்டத்

தின்கீழ் அவரால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றம் முன்னர் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டிருந்தாலன்றி பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*தலையீடு அல்லது தகாத செல்வாக்கைப் பிரயோகித்தல் முதலியன தவறொன்றாதல்.*

**23.** (1) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அலுவலரினால் ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை பிரயோகிப்பதில் அல்லது புரிவதில் பேரவையின் எவரேனும் உறுப்பினருடன் அல்லது அலுவலருடன் தலையிடுவதற்கு அல்லது முட்டுக்கட்டையிடுவதற்கு ஆளொருவர் எதனையும் செய்தல் ஆகாது அல்லது அத்தகைய ஏதேனும் உறுப்பினர் அல்லது அலுவலர்மீது தகாத செல்வாக்கை அல்லது வலுக்கட்டாயத்தை செலுத்துதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவினால் விதிக்கப்பட்ட தடையை மீறிச் செயலாற்றுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

*பேரவையின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**24.** பேரவையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காகவும் அதன் கருத்திற்குள்ளும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பேரவையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**25.** பேரவையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

***26.*** *(1)* பேரவையானது அதன் அலுவல்களை முகாமை செய்வதற்கும் நிருவகிப்பதற்கும் அவசியமாக இருக்கின்றதான விதிகளை ஆக்கலாம். விதிகள்.

*(2)* பேரவையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

***27.*** நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் - பேணல்கள்.

(அ) 2007 யூலை 24 ஆந் தேதி சனாதிபதியின் பணிப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் (இதனகத்துப்பின்னர் "தேசிய ஆராய்ச்சிப் பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அப்பேரவையின் குறிக்கோள்களை இதுகால வரை நிறைவேற்றப்பட்டதும் அத்துடன் (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய ஆராய்ச்சிப் பேரவையின் குறிக்கோள்களுடன் ஒவ்வாதனவாகவிராததுமான எல்லாச் செயற்பாடுகளும் இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் பேரவையினால் மேற்கொண்டு நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முன்னரான தேதியன்று தேசிய ஆராய்ச்சிப் பேரவைக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாத ஆதனம் யாவும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பேரவைக்கு கைமாற்றப்படவிருப்பதாக இருத்தல் வேண்டும் ;

(இ) தேசிய ஆராய்ச்சிப் பேரவையினால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்டிருப்பதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முன்னரான தேதியில் முடிவுறாதிருக்கின்றதுமான துடர்ச்சி, குற்றவழக்குகள், வழக்குகள்,

வழக்கு நடவடிக்கைகள், கருமங்கள் அல்லது காரியங்கள் யாவும் பேரவையினால் அல்லது பேரவைக்கு எதிராக தொடரப்பட்டிருக்கும் துடர்ச்சி, குற்றவழக்குகள், வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், கருமங்கள் அல்லது காரியங்கள் என்பனவாக இருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் சொல்லப்பட்ட தேசிய ஆராய்ச்சி பேரவை சார்பாக அல்லது அதற்கு எதிராக செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பேரவையின் சார்பாக அல்லது அதற்கு எதிராக செய்யப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப்படலாம் ;

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று பதவி வகிக்கும் தேசிய ஆராய்ச்சிப் பேரவையின் அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து தேசிய ஆராய்ச்சிப் பேரவையில் அவர்களுடைய தொழில் நியதிகளை விட குறைவான அனுகூலமாக இராத நியதிகள்மீது பேரவையின் அலுவலர்கள் அல்லது ஊழியர்களாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) தேசிய ஆராய்ச்சிப் பேரவையினால் அல்லது பேரவையுடன் உறப்பட்ட எல்லா தனிசுகளும், கடப்பாடுகளும், சொத்துக்களும், பொறுப்புக்களும், அதனால் அல்லது அதனுடன் நிறைவேற்றப்பட்ட அல்லது வலுவுக்கிடப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் அதனால் அல்லது அதனுடன் செய்துகொள்வதற்கு ஈடுபட்ட அல்லது உடன்பட்டுக்கொண்ட எல்லாக் கருமங்களும் காரியங்களும் அத்துடன் சொல்லப்பட்ட தேசிய ஆராய்ச்சி பேரவைக்காக

அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்டதும் நியமிக்கப் பட்ட தேதிக்கு உடன் முன்னரான நாளன்று உள்ளது மான எல்லா உரிமங்களும் நியமிக்கப்பட்ட தேதியி லிருந்து பேரவையினால் அல்லது பேரவையுடன் உறப் பட்ட தனிசுகளும் கடப்பாடுகளும் சொத்துக்களும் பொறுப்புக்களும், அதனால் அல்லது அதனுடன் நிறை வேற்றப்பட்ட அல்லது வலுவுக்கிடப்பட்ட எல்லா ஒப்பந் தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் அதனால் அல்லது அதனுடன் செய்யப்படுவதற்கு ஈடுபட்ட அல் லது உடன்பட்டுக்கொண்ட எல்லா கருமங்களும் காரி யங்களும் அத்துடன் பேரவைக்காக அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட உரிமங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

**28**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி :-

"அமைச்சர்" என்பது, இச்சட்டத்துக்கான ஏற்பாடுகளின் அமுலாக்கம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்படு கின்றதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**29**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்